
# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 02 | MAY 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE


## கொரோனா

தற்போதைய சூழல் கற்றுத் தரும் பாடம்



இன்றைக்கு நாம் சந்திக்கும்
**அசாதாரண சூழ்நிலையில்** தான்
**பணத்தின் உண்மை நிலை** புரிகின்றது.

**சேமிப்புகள்** மற்றும் **முதலீடுகள்**
நமது தேவைக்கேற்ப
எளிதில் **பணமாக்கும் வண்ணம்**
அமைத்துக்கொள்வது நல்லது.

எவ்வளவு **சம்பாதிக்கிறோம்** என்பது **முக்கியமல்ல**
எவ்வாறு **நிர்வாகிக்கிறோம்** என்பது தான் **முக்கியம்**



**அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின்?** – குறள்: 483

**பொருள்:** உரிய கருவிகளை, அதாவது தகுந்த சாதனங்களைக் கொண்டு, அதற்குரிய காலத்தையும் அறிந்துகொண்டு ஒரு செயல் செய்யப்பட்டால், செய்வதற்குரிய செயல் (அருவினை) என்று ஏதாவது இருக்க முடியுமா? என்று வினவுகிறார் வள்ளு ஏற்ற காலத்தை அறிந்துகொண்டு, அதற்கேற்ற கருவிகளுடன் துணையோடு ஒரு செயல் மேற்கொள்ளப்பட்டால் நிகழ்த்த முடியாதது என்று எதுவும் இருக்க முடியாது என்பதே இதன் பொருள்.
ஆகையால், எதிர்காலத் தேவையை முதலில் தீர்மானித்துக்கொண்டு, அதற்குரிய சேமிப்புகள் மற்றும் முதலீடுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மேற்கொள்ளும்போது நமது விருப்பங்கள் எதுவாக இருந்தாலும் அது நிறைவேறுவது சாத்தியமே.

நமது குலகுரு ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகளின் அருளால், உங்களது ஆரோக்கியம், மன தைரியம், குடும்பம், வியாபாரம் மற்றும் நிதி மேலாண்மை சிறப்பாக அமைய இதழ்குழு வாழ்த்துகிறது.




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536

METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

## மெட்ரோ ஷூ மார்ட்





16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

TEXMO®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems


Borewell Submersibles


Single Phase Jet Pumps


Pressure Boosting Systems


Electric Motors


Single Phase Domestic Pumps


Agricultural Monoblocks


Open-well Submersibles

## பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



## Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெஞ்கோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

சிட்கான் 2021 மாநாடு, கொரோனா பெருந்ததொற்றின் இரண்டாம் அலை மற்றும் ஊரடங்கினை கருத்தில் கொண்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். கொரோனா தாக்கம் குறைந்து அரசின் தளர்வுகளுடன் கூடிய அறிவிப்புகள் வந்தபின் சிட்கான் 2021 மாநாட்டிற்கான பணிகள் நிச்சயம் தொடரும் என்பதை இதழின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம்.

பாரதத்தின் ஐந்து மாநில தேர்தல் முடிவு அறிவிப்புகள் வெளியாகியுள்ளது. இதில், தமிழகத்தின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்று தமிழகத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். அவரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். வெற்றிபெற்ற புதிய முதல்வருக்கு மின்னஞ்சல் வாயிலாக சேம்பர் வாழ்த்து செய்தியை அனுப்பியுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகள் மக்களை நல்வழியில் கொண்டு செல்வார் என்று நம்புகிறேன்.

கொரோனாவின் இரண்டாம் அலையின் தாக்கம் மிகவும் மோசமாக உள்ளது. இதனை தமிழக முதல்வர் அவர்கள் உரிய மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை காக்க வேண்டும் என்பது தற்போதுள்ள அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

நோய் வந்தபின் அவஸ்தைபட்டு, அரசிற்கும் சுமையளிப்பதை விட, மக்கள் ஒவ்வொருவரும் நோயின் தீவிரத்தை உணர்ந்து தற்காப்புடன் செயல்படுவது உத்தமமான செயல். இந்த சவாலான நிலையிலிருந்து நிச்சயம் வெளிவருவோம் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோம். நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

ஸௌராஷ்ட்ர மொழியில்
ல்ஹெறக்கஜனி ஜிவ்னாத்தெக் ஜிவ்னம் ர்ஹறியெஸோனு
தெ[3]க்கைகின் ந்ஹறீத்தகு நஜ்ஜாய்

**பொருள்:** அளவறிந்து அதற்குத் தக்கபடி வாழ்க்கை நடத்தாதவனுடைய ஆடம்பரச் சிறப்பு இருப்பதுபோல் இருந்து இல்லாமற் போய் மீண்டும் தலைதூக்க முடியாமல் கெட்டுப் போகும்.

அதிகாரம் 48 வலியறிதல் அரசியல்

(தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது)

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

– K.K. தினேஷ்

**16.04.2021** – கொரோனா இரண்டாம் அலையிலிருந்து நாம் எவ்வாறு தற்காத்துக்கொள்வது, கொரோனா தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வு குறித்து அறிந்து கொள்வதற்காக சிறப்புக் கூட்டம் நமது சேம்பரில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக மரு. கா.வி. **அர்ஜுன் குமார்.** எம்.பி.பி.எஸ்., டி.பி.எச். அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டம், சேம்பர் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். கலந்து கொண்ட அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சமூக இடைவெளியுடன், உரிய பாதுகாப்புடன் இந்த கூட்டம் நடைபெற்றது.

**23.04.2021** – முதல் முறையாக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மிகவும் மோசமாக பரவி வரும் கொரோனா தொற்றிலிருந்து நம்மை தற்காத்திட, பொது மக்களின் நலன் கருதி, கொரோனா தடுப்பூசி முகாம் சேம்பர் சார்பாக தெப்பக்குளம் ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 431 பேர் தடுப்பூசியை செலுத்திக் கொண்டு பயனடைந்தனர். இந்த முகாம் சிறப்பாக நடைபெற உதவிய, **விக்னேஷ் கிராபிக்ஸ்** திரு. T.R. **மோகன்ராம், ஜியோ ஆர்ட்ஸ்,** திரு. K.K. **குபேந்திரன், முன்னாள் தலைவர்கள்** திரு. K.K.G. **பிரபாகரன்** மற்றும் திரு. S.K.R. **ரமேஷ்** ஆகியோருக்கும், இடமளித்த ஸ்ரீமந் நாயகி மந்திர் கவுன்சில் நிர்வாகிகளுக்கும், முன்களப்பணியாற்றிய பள்ளி ஆசிரியர்களுக்கும், மருத்துவர்கள் மற்றும் சேம்பர் குழுவினருக்கும் சேம்பர் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாம் அலை ஊரடங்கின் காரணமாக இந்த மாத இதழானது பிரசுரிக்கப்படவில்லை. மாறாக, மின் இதழாக வெளியிட்டுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அரசு ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தும் அறிவிப்புகள் வரும்வரை மின் இதழாகவே வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டின் இரண்டாம் கொரோனா அலை மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டு செல்கிறது. சென்ற ஆண்டு கொரோனா, பாதிப்பு அளவில் இருந்தது, இந்த இரண்டாம் அலை மரணம் வரை கொண்டு செல்கிறது. ஆகவே, பொது மக்கள் தயவு கூர்ந்து மிகுந்த கவனத்துடனும், அறிகுறிகள் தென்பட்டால் தகுந்த மருத்துவ சிகிச்சைகளை எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறோம். அதற்காகவே, கொரோனா குறித்த அரசின் வழிகாட்டு முறை தகவல்கள் பல இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

சிட்கான் 2021 மாநாடுப் பணிகள் கொரோனா பரவல் மற்றும் ஊரடங்கின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அரசின், ஊரடங்கு குறித்த தளர்வுகள் அறிவிப்புகள் வந்த பின்னர் சிட்கான் மாநாடு பணிகள் தொடரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழக தேர்தல் முடிவுகள், திமுக தலைவர் திரு. ஸ்டாலின் அவர்களை முதல்வராக காண மக்கள் பணித்துள்ளதை மனமுவந்து ஏற்று, அவருக்கு வாழ்த்துக்களை இதழ் குழுவின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். - B.S. **ஜெனார்த்தனன்**




• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office : No. 45, Kakkathoppu Street, Town Hall Road, Madurai - 1. Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office : 66, Kamarajar Street, Opp. Keelavasal Bus Stop, Madurai - 9. Cell : 73737 82633
https://youtu.be/-JMVniVMLr0

Prop. M.S. Divyarani
HerboCare
Leakage Free Fly
Herbal Sanitary Napkins
ஹெர்பல் சானிட்டரி நாப்கின்ஸ்

Customer Care : 99441 66722, 99447 95767
மாதவிடாய் குறைபாடுகளில் இருந்து குணமடைய எங்கள் ஹெர்போகேர் ஹெர்பல் சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்துங்கள்
L, XL, XXL அளவுகளில் கிடைக்கிறது
Mfrd. By
Sanghath Health Care
42, South Masi Street, Madurai - 625001
email: herbocareproducts@gmail.com

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk







# இரண்டாம் அலை கொரோனா - தற்காப்பு வழிமுறை கூட்டம்

நாடு முழுவதும் கொரோனா இரண்டாம் அலை தாண்டவமாடி வரும் நிலையில் அதிலிருந்து விழிப்புணர்வுடன் நம்மை தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகளை தனிநபர், தொழில்துறையினர் ஆகியோர் அறிந்துகொள்வதற்காக இந்த விழிப்புணர்வு கூட்டம் கடந்த 16.04.2021 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.


இந்த கூட்டத்திற்கு மதுரை, சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் மருத்துவர் **கா.வி. அர்ஜுன் குமார்**, எம்.பி.பி.எஸ்., டி.பி.எச்., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

இந்த கூட்டம், அரசின் விதிமுறைகளின்படி, சமூக இடைவெளியுடன், அரசு தெரிவித்துள்ள கூட்ட எண்ணிக்கைக்கும் குறைவான நபர்கள் பங்கு கொள்ளும் வகையில், முகக்கவசம், சானிடைசர், ஆக்ஸி மீட்டர், வெப்பமானி போன்றவைகளை உபயோகித்து உரிய பாதுகாப்பு முறையில் இந்த கூட்டம் நடத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினர் திரு. **கா.வி. அர்ஜுன் குமார்** அவர்கள் பேசுகையில், தனி நபர் கட்டாயம் மாஸ்க் அணிய வேண்டும். தொழில் துறையினர்கள், எஸ்.ஓ.பி. (S.O.P. - Standard Operating Procedure) முறையை சரியாக பினபற்ற வேண்டி கேட்டுக்கொண்டார். S.O.P. முறை என்பது, தொழிலாளர்கள் அவசியம் மாஸ்க் அணிவது, உள்ளே நுழையும்போது சானிடைசர் பயன்படுத்துவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது, பணியிடத்தை சுகாதாரமுறையில் வைத்துக்கொள்வது போன்ற நடவடிக்கைகளை முறையாக பின்பற்றினாலே போதுமானது. தவறும் பட்சத்தில் ரூ. 5000/- அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தடுப்பூசியை எடுத்துக்கொண்டவர்கள், எந்த உணவு வகைகளையும் எடுத்துக்கொள்ளலாம். அதில் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. சர்க்கரை நோய் உள்ளவர்கள் தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். எந்த ஒரு பயமும் கொள்ளத் தேவையில்லை. தடுப்பூசி எடுத்துக்கொண்டால் லேசான காய்ச்சல் வரும், அதற்காக பயப்படத்தேவையில்லை. அப்போது தான் மருந்து நன்றாக வேலை செய்கிறது என்று தெரிந்துகொள்ளுங்கள் என்று பல்வேறு தகவல்களைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் Dr. A.R. **கணேசன்** அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். முன்னாள் தலைவர்கள் திரு. K.K.G. **பிரபாகரன்**, திரு. S.K.R. **ரமேஷ்**, இணைச்செயலாளர்கள் திரு. J.S. **சாயிஜீவன்** மற்றும் திரு. K.K. **குபேந்திரன்** ஆகியோர் கலந்து கொண்டனர்.



ளராஷ்டிர வர்த்தக சபையில்
ானா விழிப்புணர்வுக் கூட்டம்

, ஏப். 16: செளராஷ்டிர தொழில் வர்த்தக
சார்பில் கரோனா தொற்று குறித்த விழிப்பு
க் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
ரானா தொற்று 2-ஆவது அலை பாதிப்பில்
து தனிநபர்கள், தொழில் துறையினர் எவ்
தற்காத்துக் கொள்வது என்பது குறித்தும்,
னா தடுப்பூசி குறித்தும் தெரிந்து கொள்வதற்
க்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
தாரத்துறை துணை இயக்குநர் கே.வீ.அர்
மார் பங்கேற்று, கரோனா தொற்று குறித்து
கிப் பேசினார். அப்போது, கரோனா 2-
அலை வேகமாகப் பரவி வரும் நிலையில்,
ன் நிலையான வழிகாட்டுதல்களைப் பின்
ாறு தொழில் துறையினரை அவர் கேட்டுக்
டார்.
ில், செளராஷ்டிர வர்த்தக சபை பொதுச்
ர் கே.கே.தினேஷ், நிகழ்ச்சிக் குழு தலை
..ஆர்.சரவணன், முன்னாள் தலைவர்கள்
.ஜி. பிரபாகரன், எஸ்.கே.ஆர்.ரமேஷ்
ட்டோர் கலந்து கொண்டனர்.










https://www.facebook.com/sourashtrachamberofcommerce/videos/305491124506207/


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



# கொரோனா தடுப்பூசி முகாம்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், பொது மக்களின் நலன் கருதி கொரோனா தடுப்பூசி முகாம் கடந்த 23.04.2021 – வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை கீதா நடன கோபால நாயகி மந்திர் அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த முகாமை சேம்பர் தலைவர் திரு. **குமரன் B.ஐகுவா** அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். (அருகில் மருத்துவர் விஷால் குமார் உள்ளார்.) இந்த முகாமில் பொது மக்கள் 431 பேர் கலந்து கொண்டு (கோவிஷீல்டு மட்டும்) தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர். இதில் முதல் முறை மற்றும் இரண்டாவது முறை தடுப்பூசி செலுத்துக்கொள்பவர்கள் இரு பிரிவனருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்த முகாம் நடத்த ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் பள்ளி அரங்கை அதன் கவுன்சில் நிர்வாகிகள் சேவை மனப்பான்மையுடன் வழங்கியதோடு மட்டுமல்லாமல், பள்ளி ஆசியர்கள் மற்றும் அலுவலர்களை முன்களப்பணியாளர்களாக பணியாற்றியதற்கு எமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. அதோடு, மருத்துவக்குழுவினரின் அர்பணிப்பு செயல், சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களின் சேவை பாராட்டுதலுக்குரியது. இந்த முகாம், சேம்பர் செயற்குழு உறுப்பினர் Dr. A.R. **கணேசன்** அவர்களின் தலைமையில், செயற்குழு உறுப்பினர்கள் திரு. N.S. **பிரேம் குமார்**, திரு. T.R. **சரவணன்**, திரு. S.K.B. **சந்திரபிரகாஷ்** மற்றும் திரு. B.S. **ஜெனார்த்தனன்** ஆகியோர் குழு உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டனர்.














SOURASHTRA CHAMBER OF COMMERCE
VOLUNTEER
COVID-19
FREE VACCINATION CAMP
23.04.2021








இலவச தடுப்பூசி முகாம்


கொரோனா
இலவச தடுப்பூசி முகாம்


கொரோனா
இலவச தடுப்பூசி முகாம்
நாள் : 23.04.2021 - வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 11.00 மணி முதல் பகல் 3.00 மணி வரை

# PF is no longer a tax-free haven

Interest on contributions above Rs. 2.5 lakh a year is now taxable. which reduces the effective return from the Provident Fund. Here is how the tax and surcharges on higher incomes reduce the rate.

| Individual's Contribution to Provident fund in a year | Over all weighted returns(%) from PF |
|---|---|
| up to Rs. 2.5 lakh | 8.5 |
| Rs. 3 lakh | 8.06 |
| Rs. 6 lakh | 6.95 |
| Rs. 12 lakh | 6.4 |
| Rs. 24 lakh | 6.12 |
| Rs. 36 lakh | 5.79 |
| Rs. 48 lakh | 5.73 |
| Rs. 60 lakh | 5.58 |
| Rs. 1.2 crore | 5.27 |
| Rs. 2.5 crore | 4.91 |

How much money would you want to take with you. It is all garbage beyond a point. It's very high time to understand your life goals.

**"Meaning of Life is to find the Purpose."**

**"Purpose of Life is give it away."**

- **S.S. Ramsundar,** Financial Consultant

# இரங்கல்



நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், பிரகாஷ் பில்டர்ஸ் உரிமையாளருமான திரு. T.R. **சூரிய பிரகாஷ்** அவர்கள் கடந்த 20.04.2021 அன்று காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.



நமது சேம்பர் ஆண்டு சந்தா உறுப்பினரும், சாரி காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளருமான திரு. R.N. **ஸ்ரீநிவாசன்** அவர்கள் கடந்த 28.04.2021 அன்று காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.



நமது சேம்பர் ஆண்டு சந்தா உறுப்பினரும், நிதி ஆலோசகருமான திரு. B.K. **சிவானந்தம்** அவர்கள் கடந்த 09.05.2021 அன்று காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

**தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுங்கள்**
**கொரோனா நோயை விரட்டுங்கள்...**


18 ஆம் ஆண்டு சேவை

பதிவு எண்: 16 / 2002 Ph : 0452 - 2679676, 4219676

**மகாத்மா முதியோர் இல்லம்**

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-06/CIT-I

FCRA No. 075940608
PAN No. : AABTM1941R

A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org

**ஒருநாள் நீங்களும் உதவலாமே**

தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.

"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."

18 ஆண்டு சேவை

தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337



UIN No. Applied MFG. No. 8/25 D

**பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.**
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க

**PLASMODIN CAPSULES 500 mg.**
Increase Immunity Power



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

# கொரோனா விழிப்புணர்வு தகவல்கள்

## பொதுமக்கள் முடிந்த அளவு
# திறந்த வெளியைப் பயன்படுத்த வேண்டும்

கொரோனா வைரஸ் காற்றோட்டமும் ஜன்னல்களும் இல்லாத அடைப்பான இடங்களில் அதிகம் பரவுகின்றது.

மருத்துவமனைகளும் காற்றோட்டம் இல்லாத பெரிய அளிவலான கடைகளும்தான் கொரோனா பரப்பும் மையங்களாக உள்ளன. எனவே பொதுமக்கள் திறந்த வெளியில் உள்ள காய்கறி கடைகள், மளிகைக் கடைகளைப் பயன்படுத்த முன்வர வேண்டும். இன்றைய சூழலில் அலங்காரமான ஆனால் அடைப்பாக இருக்கும் கடைகளுக்குப் போவதைத் தவிர்க்க வேண்டும்.

முக கவசம் அணிவதால் கிடைக்கும் பயன் என்பது மற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் சேர்த்து கடைப்பிடித்தால் மட்டுமே கிடைக்கும். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் உணவு மற்றும் மருந்துகளை மருத்துவர்கள் ஆலோசனையுடன் எடுத்துக் கொள்வதாலும், யோகா, உடற்பயிற்சிகளை மேற்கொள்வதாலும் கொரோனா தொற்று ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறைக்க முடியும் என்று தமிழ்நாடு அரசின் முன்னாள் பொது சுகாதார இயக்குனர் டாக்டர் க. குழந்தைசாமி தெரிவித்தார்.

கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் என்ற இரண்டு தடுப்பூசிகளும் பாதுகாப்பானவையாகவும் நோய் எதிர்ப்பு சக்தியை சிறப்பாக உருவாக்குபவையாகவும் செயல்படுகின்றன.

எந்த விதமான தயக்கமும் இல்லாமல் இந்த தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளலாம். வைரஸ் தொற்று மூலமும் தடுப்பூசி மூலமும் மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதம் பேர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும்போதுதான் வைரஸ் செயலிழந்து போகும். எனவே தகுதி உள்ளவர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வது இன்றியமையாதது ஆகும்.

முன்களப் பணியாளர்கள் அனைவரும் கூடிய விரைவில் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். ஏற்கனவே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், டிஸ்சார்ஜ் ஆனதில் இருந்து ஒரு மாதம் கழித்து தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.




கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களும் கோவாக்ஸின் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம்.

முதல் தவணை தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு 12 வாரங்களுக்குள் அடுத்த தவணை தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளாவிட்டால் அவர்கள் போட்டுக்கொண்ட முதல் தவணை ரத்தாகிவிடும். பிறகு அவர்கள் மறுபடியும் இரண்டு தவணைகள் தடுப்பூசி போட்டுக்கொண்டே ஆக வேண்டும். எனவே முதல் தவணை தடுப்பூசியோடு நிறுத்திவிட வேண்டாம். குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் இரண்டாம் தவணை தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று டாக்டர் குழந்தைசாமி வலியுறுத்தினார்.

- PIB News / Dtd. 28.04.2021




வெளியில் செல்பவர்கள்
**N95 மாஸ்க்**-ஐ பயன்படுத்துங்கள்



வீட்டில் இருப்பவர்கள்
**டிரிப்பில் லேயர் மாஸ்க்**-ஐ
பயன்படுத்தங்கள்


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



# ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# கோவிட் - 19 சுய பாதுகாப்புக்கு குப்புறப்படுத்தல்



முகம், வயிறு கீழ் நோக்கி இருக்குமாறு கிடப்பதுதான் குப்புறப்படுக்கும் முறை. சுவாசம் மற்றும் பிராணவாயு செல்வதில் முன்னேற்றம் அடையச் செய்ய, குப்புறப்படுப்பது, மருத்துவ ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலை. இது சுவாச பிரச்னையுள்ள கோவிட் நோயளிகளுக்கு பயனளிக்கக் கூடியது. குறிப்பாக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும்போது.

**குப்புறப்படுப்பதின் முக்கியத்துவம்:**


- குப்புறப்படுப்பது சுவாசத்தை மேம்படுத்துகிறது. நுரையீரல்களில் உள்ள சிறு காற்று அறைகளை திறக்கச் செய்து சுவாசத்தை எளிதாக்குகிறது.
- நோயாளி சுவாசிக்க சிரமப்படும்போது மற்றும் ரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு 94க்கு கீழ் குறையும்போது மட்டும் குப்புறப்படுப்பது தேவைப்படுகிறது.
- வட்டு தனிமையில் இருகம்போது ரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு, உடல் வெப்பம், ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு ஆகியவற்றை சீரான இடைவெளியில் கண்காணிப்பது அவசியம்.
- ஆக்ஸிஜன் சுழற்சியை தவறவிடுவது, நிலைமையை மோசமாக்கும்.
- சரியான நேரத்தில் குப்புறப்படுப்பது மற்றும் நல்ல காற்றோட்டத்தை பராமரிப்பது பல உயிர்களை காப்பாற்றும்.

**தலையணைகளை வைக்கும் முறை:**

- கழுத்துக்கு கீழே ஒரு தலையணை
- மார்புக்கு கீழே 1 அல்லது 2 தலையணைகளை மேல் தொடை வரை
- முழங்காலுக்கு கீழே 2 தலையணைகள்.

**சுயமாக குப்புறப்படுப்பதற்கு:**

- உங்களுக்கு 4-5 தலையணைகள் தேவை
- படுக்கும் நிலையில் வழக்கமான மாற்றங்கள் ஒவ்வொரு நிலையிலும் 30 நிமிடங்களுக்கு மிகாமல் இருப்பது சிறந்தது.
- 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை: **வயிறு கீழ்புறமாக இருக்கும்படி படுக்கவும்.**
- 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை: **வலப்புறம் கீழ் நோக்கி படுக்கவும்.**
- 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை: **உட்கார்ந்த நிலையில் சாய்ந்திருக்கவும்.**
- 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை: **இடப்புறம் கீழ் நோக்கி படுக்கவும்.**
- **பின் மீண்டும் முதல் நிலைக்கு மாறவும்: வயிறு கீழ்புறமாக இருக்கும்படி படுக்கவும்.**




**எச்சரிக்கை:**

- சாப்பிட்டபின் ஒரு மணி நேரத்துக்கு குப்புறப்படுப்பதை தவிர்க்கவும்.
- உங்களால் முடிந்தவரை குப்புறப்படுப்பதை செய்யவும்.
- ஒருவர் நாள் ஒன்றுக்கு, 10 மணி நேரம், தங்கள் வசதிப்படி பல சுற்றுகளாக குப்புறப்படுக்கவும்.
- அழுத்தும் இடங்களை மாற்ற, தங்கள் வசதிப்படி, தலையணைகளை சற்று நகற்றிக் கொள்ளலாம்.
- காயம் உள்ள இடத்தில் அழுத்தம் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவும், முக்கியமாக எலும்பு பகுதிகளைச் சுற்றி.



\- pibnews

# லேசான / அறிகுறிகள் இல்லாத கொவிட்-19 பாதிப்புள்ள நபர்களின் வீட்டு தனிமைப்படுத்தலுக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள்



2020 ஜூலை 2 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு மாற்றாக கீழ்கண்ட வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன. வழிகாட்டுதல்களின் படி, லேசான / அறிகுறிகள் இல்லாத கொவிட்-19 பாதிப்புள்ள நபர்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. சுய பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலம், கொவிட் பாதிப்பை பலரால் வீட்டிலிருந்தே சமாளிக்க முடியும் என்பதால், கொவிட்-19 அறிகுறிகள் எதுவும் ஏற்பட்டால் பீதியடைய வேண்டாம் என இந்த குறிப்பு மக்களுக்கு அறிவுறுத்துகிறது. கொவிட்-19 பொதுவான அறிகுறிகளை இது பட்டியலிடுகிறது. முதல் முறையாக அறிகுறிகளை உணரும்போது, மக்கள் தங்களை வீட்டில் தனிமைபடுத்திக்கொள்ள வேண்டும் என இது பரிந்துரைக்கிறது.

## வீட்டு தனிமைப்படுத்தலுக்கு தகுதியுடைய நோயாளிகள்:

- லேசான/அறிகுறிகள் இல்லாத கொவிட்-19 பாதிப்புகள் நபர் என்று சிகிச்சையளிக்கும் மருத்துவ அதிகாரி சான்றளிக்க வேண்டும்.
- நோயாளியை தனிமைப்படுத்துவதற்கும், குடும்ப உறுப்பினர்களை தனிமைப்படுத்துவதற்கும் போதுமான வசதிகள் வீட்டில் இருக்க வேண்டும்.
- அனைத்து நாட்களும் 24 மணி நேரமும் நோயாளியை பார்த்துக்கொள்ள பராமரிப்பாளர் இருக்க வேண்டும். ஒட்டுமொத்த தனிமைப்படுத்தல் காலத்திலும் பராமரிப்பாளர் மற்றும் மருத்துவமனை இடையே தொடர்பு இருக்க வேண்டும்.
- 60 வயதுக்கு மேற்பட்டவர்களும், இணைநோய்த்தன்மை உடையவர்களும் மருத்துவ அதிகாரியால் முறையாக மதிப்பிடப்பட்ட பிறகே வீட்டு தனிமைப்படுத்தலுக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
- எச்.ஐ.வி. தொற்றுடையோர், உறுப்பு சிகிச்சை செய்து கொண்டவர்கள், புற்றுநோய் சிகிச்சை பெறுவோர் ஆகியோரும் மருத்துவ அதிகாரியால் முறையாக மதிப்பிடப்பட்ட பிறகே வீட்டு தனிமைப்படுத்துதலுக்கு அனுமதிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு வீட்டு தனிமைப்படுத்தல் பரிந்துரைக்கப்படவில்லை.
- பராமரிப்பாளரும், பாதிப்புள்ளவரின் அனைத்து நெருங்கிய தொடர்புகளும் ஹைட்ரோகுளோரோகுயின் புரோபிலாக்சிஸை மருத்துவ அதிகாரியின் பரிந்துரைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். கூடுதலாக, **https://www.mohfw.gov.in/pdf/Guidelinesforhomequarantine.pdf** எனும் இணைய முகவரியில் உள்ள வழிகாட்டுதல்களையும் பின்பற்ற வேண்டும்.

## நோயாளிக்கான விதிமுறைகள்:

- குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து, குறிப்பாக வயது முதிர்ந்தோர் மற்றும் உயர் ரத்த அழுத்தம், இதய நோய், சிறு நீரக நோய் போன்ற இணை நோய்கள் உள்ளவர்களிடம் இருந்து நோயாளி தன்னை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனி அறையில் தங்க வேண்டும்.
- நல்ல காற்றோட்டமுள்ள அறையில் நோயாளி தங்க வைக்கப்பட வேண்டும்.
- மூன்றடுக்கு முகக்கவசத்தை எப்போதும் அணிய வேண்டும். 8 மணி நேர பயன்பாட்டுக்குப் பின்னரோ அல்லது முகக்கவசம் அழுக்கானாலோ, 1 சதவீத சோடியம் ஹைப்போகுளோரைட்டின் மூலம் கிருமிநாசம் செய்த பின்னர் அதை அப்புறப்படுத்தவும்.
- நோயாளிகள் நன்றாக ஓய்வெடுத்து, உடலில் நீர் சத்தை பராமரிக்க நிறைய திரவங்களைப் பருக வேண்டும்.
- சுவாச ஒழுங்குமுறைகளை எப்போதும் கடைப்படிக்க வேண்டும்.
- குறைந்தது 40 நொடிகளுக்கு சோப் மற்றும் தண்ணீர் கொண்டு கைகளை அடிக்கடி கழுவ வேண்டும் அல்லது ஆல்கஹால் சார்ந்த கிருமி நாசினியைப் பயன்படுத்தி சுத்தப்படுத்த வேண்டும்.
- சொந்த உபயோகப் பொருள்களை அடுத்தவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.
- அறையில் உள்ள அடிக்கடித் தொடக்கூடிய இடங்களை (மேஜையின் மேற்புறங்கள், கதவுக் குமிழ், கைப்பிடிகள், இன்னும்பல) ஒரு சதவீதம் ஹைப்போக்குளோரைட் திரவத்தால் சுத்தப்படுத்தவும்.
- ஆக்சிமீட்டர் மூலம் ரத்த ஆக்சிஜன் அளவை சுயப்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
- தங்களுடைய தினசரி உடல் வெப்பத்தை சோதிப்பதன் மூலம், நோயாளிகள் தங்கள் ஆரோக்கியத்தை தாங்களே கண்காணித்து, அறிகுறி ஏதாவது மோசமாக இருந்தால் உடனடியாக தகவல் அளிக்க வேண்டும்.

## பராமரிப்பு அளிப்பவர்களுக்கான விதிமுறைகள்:

### முகக்கவசம்:

- மூன்றடுக்கு மருத்துவ முகக்கவசத்தை பராமரிப்பு அளிப்பவர்கள் அணிய வேண்டும். பாதிக்கப்பட்ட நபருடன் ஒரே அறையில் இருக்கும்போது என்95 முகக்கவசம் அணிய

வேண்டும். – முகக்கவசத்தின் முன் பகுதியை பயன்படுத்தும் போது தொடவோ, கையாளவோக் கூடாது.

- திரவ சுரப்பின் காரணாக முகக்கவசம் ஈரமானாலோ அல்லது அழுக்கானாலோ, அதை உடனடியாக மாற்ற வேண்டும். பயன்படுத்திய பின் முகக்கவசத்தை பாதுகாப்பாக அப்புறப்படுத்தவும். அதன் பிறகு கையை சுத்தப்படுத்தவும்.
- முகம், மூக்கு அல்லது வாயைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**கை தூய்மை:**

- பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவரது உடனடி சுற்றுப்புறத்துடன் தொடர்பு ஏற்பட்டால் கையை சுத்தப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.
- உணவு தயாரிப்பதற்கு முன்பும், பின்பும், சாப்பிடுவதற்கு முன், கழிப்பறையைப் பயன்படுத்தியதற்கு பின் மற்றும் எப்போதெல்லாம் கைகள் அழுக்காக தென்படுகிறதோ, அப்போதெல்லாம் கைகளை சத்தப்படுத்துதல் வேண்டும்.
- கைகளில் வெளிப்படையாக அழுக்கு இல்லையென்றால், கைகளில் தடவக்கூடிய ஆல்கஹால் சார்ந்த கிருமி நாசினியைப் பயன்படுத்தலாம்.
- சோப் மற்றும் தண்ணீரை பயன்படுத்திய பின்னர், கைகளைத் துடைப்பதற்கு தூக்கி எறியக் கூடிய காகிதத் துண்டுகளைப் பயன்படுத்துதல் சிறந்தது. அவை கிடைக்கவில்லை என்றால், இதற்காகவே ஒதுக்கப்பட்ட சுத்தமான துண்டுகளைப் பயன்படுத்தி, அவை ஈரமான பின்பு அவற்றை மாற்றி விடவும்.

**நோயாளியுடன் இருக்கும் போது:**

- நோயாளியின் உடம்பில் சுரக்கும் திரவங்களுடன், குறிப்பாக வாய் மற்றம் சுவாச திரவங்களில் இருந்து, நேரடித் தொடர்பைத் தவிர்க்கவும்.
- நோயாளியைக் கையாளும் போது தூக்கி எறியக்கூடிய கையுறைகளை பயன்படுத்தவும். கையுறைகளை அப்புறப்படுத்தவதற்கு முன்னரும் பின்னரும் கைகளை சுத்தப்படுத்தவும்.
- தொற்றுப் பரவக் கூடிய வாய்ப்புள்ள பொருள்களை அவரது உடனடி சுற்றுப்புறத்தில் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். (உதாரணம்: சிகரெட்டுகள், உணவுப் பாத்திரங்கள், உணவு வகைகள், பானங்கள், உபயோகப்படுத்தியத் துண்டுகள அல்லது மெத்தை விரிப்பு ஆகியவற்றை பகிர்ந்து கொள்ளுதல்).
- நோயாளிக்கு அவரது அறையிலேயே உணவு வழங்கப்பட வேண்டும்.
- நோயாளி பயன்படுத்திய பாத்திரங்கள், தட்டுகள் ஆகியவற்றை கையுறை அணிந்துக் கொண்டு சோப் / டிடர்ஜெண்ட் உபயோகப்படுத்தி சுத்தம் செய்ய வேண்டும். பாத்திரங்கள், தட்டுகள் ஆகியவற்றை மறுபடியும் பயன்படுத்தலாம். கையுறையை அப்புறப்படுத்திய பின்னரும், பயன்படுத்திய பொருள்களைக் கையாண்ட பின்னரும் கைகளை சுத்தப்படுத்துங்கள்.
- வெளிப்பரப்புகளை சுத்தப்படுத்தும் போதும், நோயாளி பயன்படுத்திய துணிகள் அல்லது மெத்தை விரிப்பை துவைக்கும் போதும் மூன்றடுக்கு மருத்துவ முகக்கவசத்தையும் தூக்கி எறியக்கூடிய கையுறைகளையும் பயன்படுத்தவும்.
- கையுறைகளை அப்புறப்படுத்துவதற்கு முன்னரும் பின்னரும் கைகளை சுத்தப்படுத்தவும்.

PIB News / Dtd. 29.04.2021

## வரி தாக்கலுக்கான கால அளவு நீட்டிப்பு விபரம்

வருமான வரி சட்டம் 1961–ன் 119வது பிரிவின் கிழ், மத்திய நேரடி வரிகள் வாரியம் கீழ்கண்ட சலுகைகளை வரி செலுத்துவோருக்கு வழங்கியுள்ளது.

- வருமான வரி சட்டம் 1961–ன் 20வது பத்தியின் கீழ் (மேல்முறையீட்டு) ஆணையருக்கு செய்ய வேண்டிய மேல்முறையீடுகளுக்கான கடைசி தேதி 2021 ஏப்ரல் 1–லிருந்து 2021 மே 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- வருமான வரி சட்டம் 1961–ன் 148வது பிரிவின் கீழ், நோட்டீஸ் பெற்றதற்கு பின்னர் வருமான வரித் தாக்கல் செய்தவற்கான கடைசி தேதி 2021 ஏப்ரல் 1–லிருந்து 2021 மே 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- வருமான வரி சட்டம் 1961–ன் 139வது பிரிவின் துணைப் பிரிவு 4 மற்றும் துணைப் பிரிவு 5 கீழ் வரி விவரங்களை தாமதமாக தாக்கல் செய்தல் மற்றும் திருத்திய விவரங்களை தாக்கல் செய்தவற்கான கடைசி தேதி 2021 மார்ச் 31–லிருந்து 2021 மே 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- வருமான வரி சட்டம் 1961–ன் 194–IA 194–IB மற்றும் 194M ஆகியவற்றின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட வரியை செலுத்துவதற்கான கடைசி தேதி 2021 ஏப்ரல் 1–லிருந்து 2021 மே 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- படிவம் 60–ல் தரப்பட்ட விளக்கங்கள் குறித்த விவரங்களைக் கொண்ட படிவம் 61–ஐ தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி 2021 ஏப்ரல் 1–லிருந்து 2021 மே 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. - PIB News / Dtd. 01.05.2021



# CoWIN போர்ட்டலில்
# புதிய 4 இலக்க பாதுகாப்பு குறியீடு அம்சம் அறிமுகம்

பல பயனர்கள் அளித்த புகார்கள் மற்றும் தரவு பாதுகாப்பு குறித்த கவலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கோவின் போர்ட்டலில் புதிய 4 இலக்க பாதுகாப்பு குறியீடு அம்சத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்ய அரசு அறிமுகப்படுத்தியுள்ள போர்டல் மற்றும் செயலி தான் CoWIN ஆகும்.

இது தொடர்பாக பல பயனர்கள் அளித்த புகார்கள் மற்றும் தரவு பாதுகாப்பு குறித்த கவலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கோவின் போர்ட்டலில் புதிய 4 இலக்க பாதுகாப்பு குறியீடு அம்சத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய பாதுகாப்பு அம்சம் தடுப்பூசி தரவுகளில் ஏற்படும் பிழைகளை பெருமளவு குறைக்கும் என கூறப்படுகிறது.

கோவின் போர்டலில் மே 8 முதல் நான்கு இலக்க பாதுகாப்பு குறியீட்டின் புதிய அம்சத்தை அறிமுகப்படுத்துகிறது. தடுப்பூசி நிலை குறித்த தரவு உள்ளீட்டு பிழைகளை குறைப்பதோடு, பொது மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் இது குறைக்கும் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசி பதிவு செய்தவருக்கு, தடுப்பூசி போடாமலேயே, அவருக்கு தடுப்பூசி போடப்பட்டதாக தகவல் அனுப்பப்பட்டது போன்ற பிழைகள் கவனத்தில் கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்த பாதுகாப்பு அம்சம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

**புதிய நான்கு இலக்க பாதுகாப்புக் குறியீடு எவ்வாறு செயல்படும்?...** இந்த புதிய அம்சம் தடுப்பூசி போடுவதற்கு ஆன்லைன் முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும். நான்கு இலக்க பாதுகாப்புக் குறியீடு ஒப்புதல் சீட்டில் அச்சிடப்படும். தடுப்பூசி பெற முன்பதிவு செய்த பின்னர் பயனாளிக்கு அனுப்பப்படும் குறுஞ்செய்தியில், இந்த 4 இலக்கக் குறியீடு எண் இருக்கும். இதை தடுப்பூசி பெற போகும் போது காண்பிக்க வேண்டும்.

ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்தவர்களின் தடுப்பூசி நிலை குறித்த தரவு உள்ளீடுகள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதை இது உறுதி செய்யும். இதனால் பிழைகள் பெருமளவு குறையும்.

**தடுப்பூசி மையத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள்?...** பதிவு செய்யப்பட்ட மொபைல் தொலைபேசியில் கிடைத்த உறுதிப்படுத்தும் எஸ்.எம்.எஸ். தகவலை எடுத்துக் காண்பிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியது.

பாதுகாப்பு குறியீட்டைக் கொண்டு தடுப்பூசி தொடர்பான பதிவு புதுப்பிக்கப்பட்ட பின்னரே டிஜிட்டல் சான்றிதழ் உருவாக்கப்படும் என்பதால் தடுப்பூசி செலுத்திக்கொள்ள பாதுகாப்பு குறியீட்டை வழங்க வேண்டும். தடுப்பூசி போடப்பட்டது அதை உறுதிபடுத்தும் எஸ்.எம்.எஸ் உங்கள் மொபைலுக்கு அனுப்பப்படும்.

தடுப்பூசி செயல்முறை வெற்றிகரமாக முடிக்கப்பட்டு டிஜிட்டல் சான்றிதழ் கிடைத்துள்ளது என்பதை இந்த எஸ்.எம்.எஸ். குறிக்கிறது.

எஸ்.எம்.எஸ். வரவில்லை என்றால், தடுப்பூசி மையத்தின் பொறுப்பாளருடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

– zeenews.india.com / dtd. 07.05.2021


K.D. பத்மினி
(A to Z Arrangements)
சத்குரு ஸரணம் சரணம்
98946 71401 99426 71819
63819 26819 90255 17366
அவ்த்த லவி பூல் தேரியோ ⁕ வரவேற்பு அமைப்பாளர்

பத்மினி ஈவன்ட்ஸ்

★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.


சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதிஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

## SCC LIFE MEMBERS BIRTHDAY GREETINGS - JUNE MONTH

பிறந்த நாள் காணும் சேம்பர் ஆயுட் கால உறுப்பினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/L-M/028 | M/s. ASVA TEXTILES | Mr. N.L.SURESH | 9443334513 | 01.06.1954 |
| SCC/L-M/355 | M/S. Srinivas Advertising | Mr. T.A.SRINIVASAN | 9842133956 | 01.06.1960 |
| SCC/L-M/308 | M/S. RAJASRI TEXTILES | Mr. P.S. KUMAR | 9344889113 | 01.06.1965 |
| SCC/L-M/215 | M/S. SRINIVASA AGENCY | Mr. S.G. SRINIVASAN | 9150099456 | 01.06.1968 |
| SCC/L-M/587 | Mrs. T.G. GIRIJA | | 9543888990 | 02.06.1968 |
| SCC/L-M/163 | M/S. RAJALAKSHMI OIL MILL | Mr. K.N. JAGADEESAN | 9789452896 | 02.06.1970 |
| SCC/L-M/347 | M/S. SRI MEENAMBAL SCREEN | Mr. V. BALAKUMAR | 9364115384 | 02.06.1974 |
| SCC/L-M/012 | M/s.T.K.D.Textiles | Mr. T.K.D.MOHAN | 9843052530 | 03.06.1947 |
| SCC/L-M/138 | M/S. HARSA SALES CORPERATION | Mr. T.M. JEEVANLAL | 9344101104 | 03.06.1967 |
| SCC/L-M/188 | M/S. MARINE ENGINEERING - EQUIPMENTS | Mr. T.R. RAVI SHANKAR | 9894035019 | 03.06.1970 |
| SCC/L-M/001 | M/s. Indowind Energy Limited | Mr. K.V.BALA | 04428330867 | 03.06.... |
| SCC/L-M/080 | M/S. Venkadathri Constructions | Mr.T.R.ESWARLAL | 9790472503 | 04.06.1952 |
| SCC/L-M/185 | M/S. CHANDRASEKARAN & Co., | CA. CHANDRASEKARAN.K.S | 9442277963 | 04.06.1956 |
| SCC/L-M/393 | M/S, NIRMAL CORPORATION | Mr. M.J. VISWANATHAN | 9842135977 | 04.06.1970 |
| SCC/L-M/333 | | Mr. K.R.D. RAJKUMAR | 9842957993 | 04.06.1977 |
| SCC/L-M/569 | M/S. PRESTIGE HANDLOOMS | Mr. P.L. SUNDAR | 9842114468 | 05.06.1961 |
| SCC/L-M/454 | M/S. DAKSHIN ACADEMY | Mr. G.K.N. RAMKUMAR | 9715543433 | 05.06.1967 |
| SCC/L-M/110 | M/s. MANI BROILER | Mr. K.R. MANIKANDAN | 8754333666 | 05.06.1972 |
| SCC/L-M/525 | M/S. IDEAL VISUAL POINT | Mr. J. SURESH | 9443473057 | 05.06.1976 |
| SCC/L-M/049 | M/s. Baabu & Babu | Mr. V.S.DYANESH BABU | 9843067497 | 06.06.1944 |
| SCC/L-M/487 | M/S. DELIGHT PRINT PAKS (P) LTD. | Mr. N.S. PREMKUMAR | 9994435350 | 06.06.1957 |
| SCC/L-M/300 | M/S. SRI MEENAKSHI CONSTRUCTIONS | Mr. C.L. SRIDHARAN | 9842752569 | 07.06.1973 |
| SCC/L-M/500 | M/S. THE SMILE CARE MULTI SPECIALITY DENTAL CARE | Dr. T.A. RAJAGOPAL | 9884223878 | 07.06.1976 |
| SCC/L-M/307 | M/S. U S A Builders - Developer | Mr. S.A. UDAYA KUMAR | 9965981810 | 08.06.1968 |
| SCC/L-M/293 | M/S. RARE ENTERPRISES | Mr. R.C. BALAJI | 9443335968 | 08.06.1969 |
| SCC/L-M/316 | M/S. GAYATHRE COMPUTERS | Mr. M.K. RAVINDRAN | 9842144663 | 08.06.1972 |
| SCC/L-M/474 | | Mr. M.E. ANANDHANATH | 9362931981 | 08.06.1981 |
| SCC/L-M/060 | M/S.JAYALAKSHMI TRADERS | Mr. B.K. KRISHNAN | 9486227997 | 09.06.1940 |
| SCC/L-M/531 | M/S.Asha Graphics | Mr. K.R.RAJENDRAN | 9344100252 | 10.06.1952 |
| SCC/L-M/062 | M/S. Lions Video Electronics | Mr. T.K.GANESAN | 9843053147, 9787733147 | 10.06.1962 |
| SCC/L-M/458 | INSURANCE CONSULTANT | Mr. T.K. SARATHI | 9842388098 | 10.06.1962 |
| SCC/L-M/535 | New No. 32 / Old No. 12, | Mr. P.R. KUMARAN | 9360045075 | 10.06.1969 |
| SCC/L-M/424 | CONSULTING CIVIL ENGINEER | Mr. P.M. GANESH BABU | 9444073980 | 10.06.1970 |
| SCC/L-M/005 | M/s.E.A.V.Rengachary & sons | Mr. E.R.KUMARESAN | 9367466777 | 11.06.1947 |
| SCC/L-M/266 | | Dr. A.R. GANESAN | 9842175804 | 11.06.1962 |
| SCC/L-M/459 | M/S. ASIAN ENTERPRISES | Mr. A.T. SANKAR | 9994300845 | 12.06.1954 |
| SCC/L-M/109 | CHARTED ACCOUNTANT | Mr. B.R. CHANDRASEKARAN | 9486781360 | 12.06.1955 |
| SCC/L-M/040 | M/s. Moorthy Digital Studio | Mr. K.R. GANDHILAL | 9842917400 | 13.06.1980 |
| SCC/L-M/198 | M/S. JAI AMAR TRADERS | Mr. P.S.R. JANARDANAN BAPU | 9843268122 | 15.06.1953 |
| SCC/L-M/488 | M/S. R.P. TRADERS | Mr. C.K. PREMNATH | 9843050797 | 15.06.1957 |
| SCC/L-M/388 | M/S. NATIONAL PRODUCTS CO., | Mr. M.K. BASKAR | 9443062446 | 15.06.1962 |
| SCC/L-M/278 | M/S. Sree Meenakshi Dyeing Company | Mr. P.P. SHYAM SUNDAR | 9362618485 | 15.06.1971 |
| SCC/L-M/251 | ARCHITECT | Mr. P.R.S. SIVA KUMAR | 9789579222 | 17.06.1956 |
| SCC/L-M/107 | M/s. ROSE MATRICULATION SCHOOL | Mrs. C.S. ASHA | 9344100639 | 17.06.1966 |
| SCC/L-M/171 | | Mr. B.K. GANANATHAN | 9443066402 | 18.06.1949 |
| SCC/L-M/410 | M/S. K.R.B. AGENCIES | Mr. K.B. SIVAPRAKASH BABU | 9443366251 | 18.06.1966 |
| SCC/L-M/391 | M/S. V.V.R. ENTERPRISES | Mr. V.V. RAMALAKSHMANJI | 9443930728 | 19.06.1964 |
| SCC/L-M/103 | M/s. RAJAMANI TRADERS | Mr. K.K. RAJAN | 9842159000 | 19.06.1977 |
| SCC/L-M/135 | M/S. USHA TRADERS | Mr. T.C. VIJAYAN | 9345144008 | 20.06.1958 |
| SCC/L-M/545 | CIVIL ENGINEERING | Mr. B.R. BASKAR | 9994738001 | 20.06.1968 |
| SCC/L-M/199 | M/S. SRI GANAPATHY SILK HOUSE | Mr. S.R. AMARLAL | 9443235970 | 20.06.1972 |
| SCC/L-M/346 | M/S. CROWN CHEMICALS | Mr. V.S. MOTHILAL | 9443473026 | 21.06.1953 |
| SCC/L-M/101 | M/s. SUGA PRIYA FOOTWEAR | Mr. K.S. JAGADEESH | 9842199237 | 22.06.1967 |
| SCC/L-M/330 | | Mr. K.S. MANIKANDAN | 9842756717 | 22.06.1968 |
| SCC/L-M/398 | M/S. M K ASSOCIATES | Mr. D.S. MANIKANDAN | 9842106979 | 22.06.1978 |
| SCC/L-M/064 | M/S. Siivaneshwar Textiles | Mr. E.V.SIVAGANESH | 9994794182 | 26.06.1970 |
| SCC/L-M/370 | M/S. OM SAKTHI TRADERS | Mr. S.K. SURENDRAN | 9940186170 | 27.06.1952 |
| SCC/L-M/100 | M/s. NAVALAKSHMI SILK | Mr. M.J. KANNAN | 9894053915 | 28.06.1969 |
| SCC/L-M/567 | M/S. SOUTHERN SURGICALS | Mrs. G.S. VANISRI | 9443674645, 7200508005 | 28.06.1971 |
| SCC/L-M/015 | M/s.Revathy tiffin center | Mr. K.G.NARAYANAN | 9344103745 | 29.06.1956 |
| SCC/L-M/280 | M/s. SARATHY CABS | Mr. N.M.S JAIKUMAR | 9865990909 | 29.06.1972 |
| SCC/L-M/598 | M/S. A.V.S & CO. | Mr. L.B. ASHOK KUMAR | 9942160024 | 29.06.... |

# SCC ANNUAL MEMBERS BIRTHDAY GREETINGS - JUNE MONTH

பிறந்த நாள் காணும் சேம்பர் ஆண்டு சந்தா உறுப்பினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/O-M/149 | M/s. KRISHNAA'S TEX | Mr. C.M. DHAMODHARAN | 9842676117 | 01.06.1946 |
| SCC/O-M/1022 | M/S. SAIRAM MARKETING | Mr. M.M. BALASUBRAMANIAN | 7373661557 | 01.06.1953 |
| SCC/O-M/998 | M/S. SRI SARAVANA DIGITAL PHOTO & VIDEO | Mr. S.D. SARAVANA BABU | 9842112161 | 01.06.1966 |
| SCC/O-M/1077 | M/S. MOLLIN VARSHI | Mr. M.S.M. SIVAPRASATH | 9994399281 | 01.06.1966 |
| SCC/O-M/253 | M/S. THIRUPATHY TEX | Mr. B.S. CHANDRA MOHAN | 9943952304 | 01.06.1967 |
| SCC/O-M/962 | M/S. HARINI CONSTRUCTIONS | Mr. M.S. PURUSHOTHAMAN | 9442577404 | 01.06.1980 |
| SCC/O-M/996 | M/S. 3K ENTERPRISES | Mr. S. KUMARAN | 9677798383 | 02.06.1980 |
| SCC/O-M/769 | M/S. VENKATESHWARA AGENCIES | Mr. A.S. MOTHILAL BABU | 9344107446 | 03.06.1954 |
| SCC/O-M/1133 | M/S. IMEX BUSINESS SOLUTIONS | Mr. R.K. PREMNATH | 8056656889 | 04.06.1972 |
| SCC/O-M/004 | M/S.Tirupathi x-ray | Mr. K.T.KUMARAN | 9843177640 | 04.06.1973 |
| SCC/O-M/1101 | M/S. SIVA SHAKTHI READYMADE | Mr. P. NAGARAJAN | 9245807948 | 04.06.1978 |
| SCC/O-M/354 | M/S. A.B.K. PHARMA DISTRIBUTERS | Mr. S.A. ANAND BABU | 9965002358 | 05.06.1967 |
| SCC/O-M/1019 | M/S. ABI CONSTRUCTION | Mr. M.M. KARTHIKEYAN | 9842188319 9842155833 | 05.06.1977 |
| SCC/O-M/376 | M/s. SIVAKUMAR TRADING COMPANY | Mr. K.T. RAMKUMAR | 9245752847 | 07.06.1964 |
| SCC/O-M/1004 | M/S. SRI GANESH TEXTILES | Mr. A.S. RAGHAVAN | 9486486441 | 07.06.1965 |
| SCC/O-M/981 | M/S. SRI HARISH MARKETING | Mr. K.K. SIVAKUMAR | 9842072746 | 07.06.1972 |
| SCC/O-M/438 | M/S. ATHMA ELECTRICALS | Mr. V.A. VENKATESHWARA RAO | 9843050462 | 07.06.1975 |
| SCC/O-M/871 | Kuppa Illam, | Mr. G.L. SATHYAM | 9843095213 | 07.06.1975 |
| SCC/O-M/1061 | ARCHITECT | Ar. N.M.S.SHIYAM | 9842192266 | 07.06.1976 |
| SCC/O-M/002 | Charter Civil engn & Regd. valuer(IT) | Mr.A.T.BASKAR | 9442937409 | 08.06.1956 |
| SCC/O-M/615 | M/S. BALAJI TEXTILE MILLS | Mr. P.R. SIVAKUMAR | 9965533064 | 08.06.1964 |
| SCC/O-M/690 | M/S. SRI BALAJI FABRIC | Mr. P.M. NAGARAJAN | 9150420705 | 10.06.1974 |
| SCC/O-M/772 | M/S. MEDLINKS LABORATORIES | Mr. S.K. SARAVANAN | 9944494138 | 11.06.1967 |
| SCC/O-M/1104 | M/S. SHRI SAI HYGIENE PRODUCTS | Mr. T.M.R. SIVASANKAR | 7010372558 | 12.06.1966 |
| SCC/O-M/756 | | Mr. T.K. GANESH | 9842981014 | 13.06.1964 |
| SCC/O-M/1106 | M/S. JAKUVA COTTAGE INDUSTRIES | Mr. J.R. PREMKUMAR | 9865760051 | 13.06.1970 |
| SCC/O-M/522 | M/S. SKY COURIER | Mr. V.V. SURESH | 9842188421 | 15.06.1971 |
| SCC/O-M/1058 | EXIDE LIFE INSURANCE | Mr. T.G.R. GANESH RAJAN | 9786006586 | 15.06.1971 |
| SCC/O-M/761 | M/S. NARAYANA AGENCY | Mr. T.M. SURESH KUMAR | 9976799170 | 15.06.1972 |
| SCC/O-M/1120 | M/S. LASER CARE | Mr. J.M. KARTHIC KUMAR | 9976937016 | 15.06.1985 |
| SCC/O-M/1002 | M/S. SIVA TEX | Mr. B.R.K. KUMARESH | 8428248480 | 16.06.1955 |
| SCC/O-M/667 | M/S. BALU SCREEN | Mr. B.R. SRI VIJAY | 9843633588 | 18.06.1967 |
| SCC/O-M/616 | ARCHITECT | Mr. N.M.K. SOORYA NARAYANAN | 9786628088 | 19.06.1946 |
| SCC/O-M/1118 | M/S. SUPER SCREEN | Mr. K.N. BASKARAN | 8300817344 | 19.06.1963 |
